[28th August 1970

என்ற முறையில் அலுவலகங்களில் மதிக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் எண்ணத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அரசாங்க அலுவலகங்களிலுள்ள ஜனாதிபதி படம், பிரதமர் படம் ஆகியவற்றோடுகூட, பயணிகள் விடுதிகள் போன்றவற்றில் உள்ள முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் படங்கள் உட்பட, எல்லாவற்றையும் எடுக்கவேண்டியிருக்கும். அதனால் உறுப்பினருடைய கருத்து உடனடியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அரசாங்க அலுவலகங்களில் சர்ச் அல்லது ஏசு கிறிஸ்து படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றனவா ? எத்தனை அலுவலகங்களில் அப்படியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதில் நம்முடைய ஜானிபாய்க்கு அதிக அக்கறை இருக்குமானால், அந்தப் பட்டியலைத் தந்தால் அரசு கவனிக்கும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : 1966-ல் வந்த புகாரில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் புகாரில், 'அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள், பள்ளிகள் ஆகியவற்றிலும் அரசிற்குச் சொந்தமான பேருந்துகளிலும் கூட, பல்வேறு கடவுள் படங்களை வகைதொகை அற்ற முறையில் நிறுவிவரும் வழக்கம் இருப்பதால், அந்தப் படங்கள் அந்தக் கடவுளை வழிபடாதவர்களுடைய மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. அதனால் பலருக்கு மன வருத்தமும் கவலையும் எதிர்ப்புணர்ச்சியும் ஏற்படுகின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Earth Tremors

*35. *Q.* THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the attention of the Government was drawn to the earth tremors which occurred during March, 1970 in Thiruppathur, Acchukattu area in Ramanathapuram district ; and

(*b*) if so, whether the Government will sanction any aid to those who have lost their houses as a result of that ?

பூமி வெடிப்பு

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் அச்சுக்கட்டுப் பகுதியில் 1970 மார்ச் மாதத்தில் பூமி வெடித்தது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் வீடு இழந்தவர்களுக்கு அரசு ஏதேனும் உதவியளிக்குமா ?

28th August 1970]

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : (அ) 1970 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட பூமி வெடிப்பு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது.

(இ) வீடு இழப்பு ஒன்றும் இல்லை. எனினும் இப்பூமி வெடிப்பினுல் பயந்துகொண்டிருக்கும் குடியிருப்போரை அரசாங்க காலி நிலங்களில் குடியிருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எஸ்.எஸ்.தென்னரசு : தலைவர் அவர்களே, நான் அந்த ஊரைச் சேர்ந்தவன். அந்த பூமி வெடிப்பினுல் 11 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரில் சென்று மறு விசாரணை செய்து அந்த வீட்டுக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : வீட்டுக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது அல்ல பிரச்னை. அவர்களுடைய ஊர்க்காரர் மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள். அதாவது அவர் தொகுதி என்று அறிகிறேன். திருப்பத்தூரில் மூன்று பகுதிகளில் இம்மாதிரி பூமி வெடிப்பு ஏற்பட்டது. 11 வீடுகளில் சுவர்களில் வெடிப்பும், அதே மாதிரி பூமியில் சில இடங்களில் ஏறக்குறைய 12 அடி நீளத்திற்கும் இரண்டங்குல ஆழத்திற்குக் கீழேயும் 4 அடி பள்ளம் விழுந்திருக்கிறது. நம்முடைய மாநில நில ஆராய்ச்சி அதிகாரியைக் கொண்டு அதைப் பார்த்த நேரத்தில் அதற்குப் பக்கத்தில் கிணறு இருந்து பம்ப் செய்து நீர் இறைப்பதால், அந்தப் பகுதியில் நீர்ப்பசை குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று தெரிந்தது. அதனுல் மண் கலவையில் மாறுதல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்று ஆராய்ச்சியில் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியை ஹைதராபாத்தில் உள்ள தலைமை ஆராய்ச்சி நிலையத்திற்கு இது பெரிய பூகம்பம்தான என்று அறிய அனுப்பியிருக்கிறார்கள். உண்மை விவரம் வரவில்லை. இருந்தாலும் அந்தப் பக்கத்தில் உள்ள மக்கள் அதிர்ச்சி அடையாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, பாதிக்கப்பட்ட அவர்கள் இடத்திற்கு பதிலாக மாற்று இடங்கள் தந்து தகுந்த வசதிகள் செய்வதற்கான நடவடிக்கையை தேவகோட்டை சப் கலெக்டர் மேற்பார்வையில் தாசில்தார் எடுத்துக்கொள்கிறார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : சாதாரணமாக தீப்பிடித்து வீடிழந்தவர்களுக்கு குறிப்பிட்ட தொகை மான்யமாகக் கொடுக்கப்படுகிறது. இப்போது இந்த வெடிப்பில் வீடிழந்த 11 வீட்டுக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : நான் திரும்பத் திரும்ப அதைத்தான் சொல்கிறேன். அங்கே ஏற்பட்ட பூமி வெடிப்பினுல் பாதிக்கப்பட்ட 11 வீட்டுக்காரர்களுக்கும் மற்ற புறம்போக்கு நிலங்களில் இடம் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.